**Dr. S Seetha,** M.Litt., Ph.D
Prof. & Head of the Dept.
of Indian Music
University of Madras
Madras 600 005.

திருமதி டி. பட்டம்மாள் அவர்கள் கர்நாடக இசைக்கு புரிந்து வரும் தொண்டுகள் யாவரும் அறிந்ததே. இசையின் இலக்ஷிய இலக்ஷணங்களில் உயர்ந்த ஞானம் படைத்த விதூஷி யாவார். சாஸ்திரீய இசையை முறைப்படி கற்றுணர்ந்தவர். ஓர் அருட் கலைஞர், இவர் இயற்றிய கீர்த்தனைகளில் பல 72 மேளராகங்களிலும், பஞ்சம வர்ஜத்விமத்திம ராகங்களிலும், சல்லாபம், ருக்மாம்பரி, சுகபாவனி போன்ற புதிய ராகங்களிலும் அமைந்திருப்பது குறிப்பிடத் தக்கது. இசை மேதைகள் பலர் இவற்றை பாராட்டியும், கச்சேரிகளில் பாடியும் வருகின்றனர்.

இவர் இயற்றிய ‘ராகப் பிரவாஹம்’ எனும் நூலில் கர்நாடக சங்கீதத்தில் வழங்கும் 5000 இராகங்களுக்கு ஆரோஹ, அவரோஹ விவரங்களையும், அவற்றிற்குச் சமமான ஹிந்துஸ்தானி இசையில் வழங்கிவரும் இராகங்களையும் குறிப்பிட்டுள்ளார். இது இராக சம்பந்தமாக ஆராய்ச்சி செய்வோர்க்கும், வித்வான்களுக்கும், ஓர் களஞ்சியமாக பயன் படுகிறது,

தற்போது திருமதி டி. பட்டம்மாள் அவர்கள் குழந்தைகளுக்கென 50 பாடல்களைத் தமிழ் மொழியில் இயற்றி, ஸ்வா தாளக் குறிப்புகளுடன் மிகச் சிறப்பாக அளித்துள்ளார். இந்நூலில் குழந்தைகள் எளிதில் பாடும் வகையில் நவக்ரஹக் கீர்த்தனைகள் அனைத்தும் ‘கீர்வாணி’ ராகத்தில் இயற்றப்பட்டிருப்பது குறிப்படிடத்தக்கது, கீர்த்தனைகளில் முறையே ஸ, ரி, க, ம, ப, த, நி என்று கீர்வாணியில் ஏழஸ்வரங்களை, க்ரஹ ஸ்வரங்களாக, அமைத்திருப்ப தோடல்லாமல். குறிப்பிட்ட அக்ஷர எண்ணிக்கையைக் கொண்ட 35 தாள வரிசைகளில் இயற்றியிருப்பது பாராட்ட வேண்டிய தொன்று. உதாரணமாக திச்ர ஏகத்தில் ஆவர்த்தத்திற்கு 3 அக்ஷர எண்ணிக்கை கொண்ட தாளம் சூரியனை ஞாயிறு அன்று போற்றுவதாக ஸட்ஜத்தை க்ரஹஸ்வரமாகக் கொண்டு அமைந்திருக்கிறது. இவ்வாறே சதுஸ்ர ஏகம் (சந்திரனின்) 4 அக்ஷரம், ‘ரி’ க்ரஹம், திச்ர ரூபகம் (செவ்வாய்) 5 அக்ஷரம் ‘க’ க்ரஹம், திச்ரஜம்ப (புதன்) 6 அக்ஷரம் ‘ம’ க்ரஹம், திச்ர திரிபுடை (வியாழன்) 7 அக்ஷரம் ‘ப’ க்ரஹம், திச்ர மட்யம் (வெள்ளி) 8 அக்ஷரம் ‘த’ க்ரஹம், சங்கீர்ண ஏகம், 9 அக்ஷரம் (சனி) ‘நி’

க்ரஹம், திச்ர அட (ராகு) 10 அக்ஷரம் தாரஸ்தாயி ‘ஸ’ க்ரஹம் திச்ர துருவம் (கேது) 11 அக்ஷரம் தாரஸ்தாயி ‘ரி’ க்ரஹம் இது புதுமையான முறையில் சிறப்பாக அணுகப் பெற்றிருப்பது குறிப்பிட வேண்டியது.

இப்பாடல்களை குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுப்பதால் அவர்கள் நவக்கிரஹங்களைத் துதித்துப் பாடிப் பலனைப் பெறுவதோடு கர்நாடக ஸங்கீதத்தின் ஸப்த தாளங்கள் மற்றும் அதில் காணும் ஜாதி பேதங்களைப் பற்றியும் மிகத் தெளிவாக அறிந்து கொள்ள முடிகிறது. மேலும் கீரவாணி ராகத்தில் (ஏழு ஸ்வரங்களையும்) ஆரோஹண கிரஹ முறையில் எடுத்துப்பாடும் ராக ஞானத்தை பெற முடிகிறது. இப்பாடல்களை ஆசிரியர் ரஞ்சகமாகவும், அதே சமயம், எளிமை யாகவும், யாவருக்கும் விளங்கும் படியும், அமைத்துள்ளது போற்றத்தக்கதாகும். மேலும் இந்துமத எல்லாத் தெய்வங்களையும் தழுவிய பாடல்கள் பல இப்பதிப்பில் காணலாம். பொய் சொல்லாமை, நயம்பட உரைத்தல், எம்மதத்தினரிடமும் அன்பு செய்தல், நம்பிக்கை உணர்வு போன்ற நல்லக்கருத்துக்கள் பல இப்பாடல்களில் இடம் பெற்றுள்ளன. பல ராகங்களில் ரஞ்சகமான வர்ணமெட்டுகளில் திச்ர, சதுச்ர போன்ற எளிய நடைகளில் பாடல்கள் இருப்பதால், குழந்தைகள் விரும்பி ஒருமுறை கேட்ட உடனேனே மகிழ்ந்து பாடக் கூடியனவாக அமைந்துள்ளன. சேர்ந்திசைக்க மிகவும் உகந்தது.

நம் நாட்டின் கலாச்சாரத்தின் சிகரமென விளங்குவது இசை. அது, இன்றைய குழந்தைகள் சமூதாயம் வீரத்தோடும், நெறியோடும் ஒற்றுமையுடன் வாழ பெரும்பங்கினை வகிக்கிறது என்பதில் ஐயமேதுமில்லை. நல்ல கர்நாடக இசை வர்ண மெட்டுகள் மூலம், இப்பாடல்கள் நமது நாட்டு கலாச்சார பண்புகளை நம் குழந்தைகளுக்கு மிகவும் எளிதில் புகட்டவல்லன.

இது காறும் அவர்கள் வெளியிட்டுள்ள பாடல்களிலிருந்து தனிப்பட்ட சிறப்புகள் பல கொண்ட இப்பாடல்களை இயற்றி, தாய் குலத்திற்கே பட்டம்மாள் அவர்கள் பெருமை சேர்த்துக் கொண்டுள்ளார். அவர்கள் இசைப் பணி மேலும் தொடர எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்கிறேன்.

**சு. சீதா**